# வேளாண்மை–உழவர் நலத்துறை



## மானியக் கோரிக்கை எண். 5

## அறிவிப்புகள்

## 2026–2027


**ர. வினோத்**

**வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்**

# வேளாண்மை–உழவர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 5

## அறிவிப்புகள்
## 2026 – 2027


**ர. வினோத்**

வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்

1. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் விதைகளின் தரம் குறையாமல் சேமித்து வைத்து அவற்றைப் பாதுகாத்திட தஞ்சாவூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, தருமபுரி, சேலம், திருப்பூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 11 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிதியில் ஒன்பது புதிய விதை சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும்.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் விதைகளின் முளைப்புத் திறன் மற்றும் வீரியம் குறையாமல் பாதுகாத்திடும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம் காட்டுத்தோட்டம் மற்றும் பட்டுக்கோட்டை, மயிலாடுதுறை மாவட்டம் நாகமங்கலம், புதுக்கோட்டை மாவட்டம் வெள்ளாளவிடுதி, தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி, சேலம் மாவட்டம் டேனிஷ்பேட்டை, திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம், திருவாரூர் மாவட்டம் காஞ்சிக்குடிகாடு மற்றும் கீரந்தி ஆகிய ஒன்பது இடங்களில் புதிய விதை சேமிப்புக் கிடங்குகள், 11 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்படும்.

2. விவசாயிகளுக்குத் தரமான வேளாண் இடுபொருட்கள் அருகில் கிடைத்திட ஏதுவாக, திருவாரூர், தருமபுரி, இராணிப்பேட்டை, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய நான்கு புதிய துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்கள், 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்படும்.

விவசாயிகள் தங்கள் கிராமங்களுக்கு அருகிலேயே தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் மற்றும் பிற வேளாண் இடுபொருட்களைப் பெற்றுப் பயனடையும் வகையில், திருவாரூர் மாவட்டம் எண்கண், தருமபுரி மாவட்டம் இந்தூர், இராணிப்பேட்டை மாவட்டம் நீலகண்டராயன்பேட்டை மற்றும் ஈரோடு மாவட்டம் கருமாண்டம்பாளையம் ஆகிய இடங்களில் விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய நான்கு புதிய துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்கள், 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்படும்.

3. மூங்கில்துறைப்பட்டில் உள்ள கள்ளக்குறிச்சி-1 சர்க்கரை ஆலை மற்றும் திருவாலங்காட்டில் உள்ள திருத்தணி சர்க்கரை ஆலை ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நவீன சுழல் வடிவ கரும்பு பிரிதிறன் இயந்திரம் மற்றும் மின்மோட்டார்கள் (Swing type Fibrizor unit with Motor) மொத்தம் 8 கோடியே 58 இலட்சம் ரூபாய் நிதியில் நிறுவப்படும்.

கள்ளக்குறிச்சி – 1 மற்றும் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் தற்சமயம் இயங்கி வரும் குறைந்த பிரிதிறன் கொண்ட கரும்பு பிரிதிறன் இயந்திரத்திற்கு (Fibrizor unit) மாற்றாக அதிக பிரிதிறனைக் கொண்ட (85 சதவீதத்திற்கு மேல்) நவீன சுழல் வடிவம் கொண்ட கரும்பு பிரிதிறன் இயந்திரம் மற்றும் மின்மோட்டார்கள் (Swing type Fibrizor unit with Motor) தலா 4 கோடியே 29 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 8 கோடியே 58 இலட்சம் ரூபாய் மாநில அரசு நிதியில் நிறுவப்படும். இதனால் கரும்புச் சக்கையில் ஏற்படும் சர்க்கரை இழப்பைக் குறைத்து சர்க்கரைக் கட்டுமானம் அதிகரிக்கப்படும்.

**4. தேனீ வளர்ப்பினை ஊக்குவித்து விவசாயிகளின் வருவாயைப் பெருக்க ரூபாய் 6 கோடியே 84 இலட்சம் நிதியில் தேனீ வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் தேன் பிழியும் கருவிகள் வழங்கப்படும்.**

தேனீ வளர்ப்பின் மூலம் மகரந்தச் சேர்க்கை அதிகரித்து, பயிர்களின் காய்ப்புத் திறன் மேம்படுகிறது. பழங்கள், காய்கறிகள் மற்றும் தென்னை போன்ற தோட்டக்கலைப் பயிர்களில் தேனீக்களின் செயல்பாடு மகசூலை உயர்த்துவதுடன், விளைபொருட்களின் தரமும் உயர்கிறது. இதனால் விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைப்பதோடு, தேன் மற்றும் பிற தேன் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில் வாய்ப்புகளும் உருவாகின்றன. இத்தகைய தேனீ வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில், 28,500 தேனீ வளர்ப்புப் பெட்டிகளும், 2,850 தேன் பிழியும் கருவிகளும் 6 கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதியில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

5. செங்கல்ராயன், திருத்தணி, வேலூர் மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் தலா 2 படிகலன் பகுதிகள் 6 கோடி ரூபாய் செலவில் தானியங்கி மயமாக்கப்படும் (Pan automation).

சர்க்கரை படிகமாக்குதலில் சர்க்கரை அளவுருக்களை சீராக்கவும், நீராவியின் அளவைக் கட்டுப்படுத்தி சர்க்கரைப் பாகுகளில் நீர் சேர்க்கையைக் குறைக்கவும் படிகலன் தானியங்கி அமைப்பு தேவைப்படுகிறது. எனவே, செங்கல்ராயன், திருத்தணி மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்கும் தலா 2 படிகலன் தானியங்கிகள், ஆலை ஒன்றிற்கு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் வீதம் நான்கு ஆலைகளுக்கு மொத்தம் 6 கோடி ரூபாய் மாநில அரசு நிதியில் அமைக்கப்படும்.

6. கள்ளக்குறிச்சி–1, செங்கல்ராயன், திருத்தணி மற்றும் பெரம்பலூர் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கழிவுப்பாகு இருப்புத் தொட்டியினை மாற்றிப் புதியதாக நிறுவ 5 கோடியே 92 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

கள்ளக்குறிச்சி–1, செங்கல்ராயன், திருத்தணி மற்றும் பெரம்பலூர் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கழிவுப்பாகு சேமிக்கும் தொட்டி நிறுவி 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் நிலையில். தொட்டியின் மேற்கூரை, பக்கவாட்டுத் தகட்டின் தடிமன் குறைந்து, மழைநீர், சூரிய ஒளி கலப்பதால் கழிவுப்பாகின் தன்மை மாறி, தரம் குறைகிறது. எனவே, கழிவுப்பாகின் தரத்தைப் பாதுகாத்திட, புதிய கழிவுப்பாகு இருப்புத் தொட்டிகள் நிறுவ 5 கோடியே 92 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. குன்னூர் பழம் பதனிடும் நிலையத்தின் உற்பத்தி மற்றும் வருவாயைப் பெருக்க, ஒரு கோடி ரூபாய் நிதியில் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு நவீன இயந்திரங்கள், உபகரணங்கள் நிறுவப்படும்.**

குன்னூரில் 1981 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பழம் பதனிடும் நிலையத்தில் ஆண்டுதோறும் பழங்கள் மற்றும் காய்கறிகளிலிருந்து சுமார் 11 மெட்ரிக் டன் அளவிற்கு ஜாம், ஜெல்லி, ஊறுகாய், ஸ்குவாஷ் உள்ளிட்ட மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் (TANHODA) விற்பனை நிலையங்கள் மூலம் தமிழ்நாடெங்கும் விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள பழம் பதனிடும் நிலையத்தின் உற்பத்தித்திறன் மற்றும் வருவாய் ஈட்டும் திறனை மேலும் மேம்படுத்த அதன் கட்டடத்தினைப் புதுப்பிக்கவும், நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நிறுவவும் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

8. செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 18 மெகா வாட் இணைமின் உற்பத்தி நிலையக் கொதிகலனில் பழுதடைந்துள்ள மின் துகளி பிடிப்பு அலகு (Electro Static Precipitator collecting and emitting electrodes revamping) ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாய் நிதியில் புதியதாக மாற்றம் செய்யப்படும்.

செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் செயல்பட்டு வரும் 18 மெகா வாட் இணைமின் உற்பத்தி நிலையத்தில் உள்ள கொதிகலனில் பொருத்தப்பட்டிருக்கும் மின் துகளி பிடிப்பு (Electro Static Precipitator) அமைப்பில் உள்ள collecting and emitting electrodes பழுதடைந்து செயல்படாமல் உள்ள காரணத்தினால் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் (Tamil Nadu Pollution Control Board) வரையறுக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாக கரித்துகள்கள் வெளியேறி சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது.

இதனை நிவர்த்தி செய்ய, ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாய் மாநில அரசு நிதியில் புதிய collecting and emitting electrodes அமைக்கப்படும்.

**9. செங்கல்ராயன், பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளுக்கு 550 கிலோவாட் திறன்கொண்ட மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவி ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

செங்கல்ராயன், பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் அரவைப் பகுதியில் இயங்கும் மின்மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவி (Variable Frequency Drive – Power and control modules) செயலிழப்பதால் ஏற்படும் அரவை நிறுத்தம் மற்றும் சர்க்கரைக் கட்டுமான இழப்பைத் தவிர்க்கும் பொருட்டு, 550 கிலோவாட் திறன் கொண்ட புதிய மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவி தலா 70 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**10. கள்ளக்குறிச்சி –1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள திறன் குறைந்த 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட படிகலனுக்கு மாற்றாக 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய படிகலன் அமைக்கப்படும்.**

கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலையின் உற்பத்திப் பகுதியில் இயங்கி வரும் 50 மெ.டன் கொள்ளளவு படிகலன், திறன் குறைந்துள்ளது. எனவே, ஆலையின் தொடர் உற்பத்தி பாதிக்காவண்ணமும், இயந்திரங்களின் பராமரிப்பு செலவினங்களைக் குறைக்கவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், 90 இலட்சம் ரூபாய் மாநில அரசு நிதியில் 50 மெ.டன் கொள்ளளவு கொண்ட புதிய படிகலன் அமைக்கப்படும்.

**11. வேளாண்மைப் பொறியியல் துறையின் 7 இயந்திரக் கலப்பைப் பணிமனைகளை நவீனமயமாக்குதல், திருவள்ளூரில் புதிய அரசு இயந்திரக் கலப்பைப் பணிமனை அமைத்தல், புதுமையான வேளாண் இயந்திரங்கள், கருவிகளை அரசு இயந்திரக் கலப்பைப் பணிமனைகளில் உருவாக்குதல் ஆகிய திட்டங்கள் 90 இலட்சம் ரூபாய் நிதியில் மேற்கொள்ளப்படும்.**

கோயம்புத்தூர், சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய 7 இடங்களில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரக் கலப்பைப் பணிமனைகளின் பராமரிப்புத் திறனை மேம்படுத்தி, வேளாண் இயந்திரங்களின் செயல்திறனை அதிகரித்திட, மேம்பட்ட பணிமனைக் கருவிகள், இயந்திரங்கள், பழுது நிலை கண்டறியும் உபகரணங்கள் போன்றவை நடப்பாண்டில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்மைப் பொறியியல் துறை இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுப் பணிகளை மேற்கொள்ள, திருவள்ளூரில் 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய அரசு இயந்திரக் கலப்பைப் பணிமனை அமைக்கப்படும். இப்பணிமனைகளில், குறைந்த செலவில், புதுமையான வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் 1 0 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்படும். நடப்பாண்டில், இத்திட்டங்கள் அனைத்தும் மொத்தம் 90 இலட்சம் ரூபாய் நிதியில் மேற்கொள்ளப்படும்.

**12. தமிழ்நாட்டிலுள்ள 285 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வருவாயினை மின்னணு முறையில் சேகரிக்க மொத்தம் 600 விற்பனை முனையக் கருவிகள் (Point of Sale Machines) வழங்கப்படும்.**

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் சந்தைக் கட்டணம், பொருளீட்டுக் கடனுக்கான வட்டி, கிடங்கு வாடகை, கடை வாடகை, உரிமக் கட்டணம், எடை மேடை வாடகை, பயனாளர் கட்டணம் மற்றும் இதர வருவாயினை மின்னணு முறையில் சேகரிக்கும் வகையில், 27 விற்பனைக் குழுக்களின் கீழ் செயல்படும் 285 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் மொத்தம் 600 விற்பனை முனையக் கருவிகள் (Point of Sale Machines) வழங்கப்படும்.

13. காஞ்சிபுரம் பரிமிளகாய், பொய்யூர் கத்திரி, சிதம்பரம் உளுந்து, கருமந்துறை கடுக்காய், திருவையாறு இலைவாழை, எறையூர் கருணைக்கிழங்கு, கடலூர் வெட்டிவேர், மணப்பாறை கத்திரிக்காய், ஊட்டி பூண்டு மற்றும் ஜவ்வாது பேய் எள் ஆகிய 10 வேளாண் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெறப்படும்.

தமிழ்நாட்டின் வேளாண் பொருட்களின் தனித்துவமான பண்புகள் மற்றும் புவிசார் அடையாளத்தின் அடிப்படையில், காஞ்சிபுரம் பரிமிளகாய், பொய்யூர் கத்திரி (நாகப்பட்டினம்), சிதம்பரம் உளுந்து (கடலூர்), கருமந்துறை கடுக்காய் (சேலம்), திருவையாறு இலைவாழை (தஞ்சாவூர்), எறையூர் கருணைக்கிழங்கு (கள்ளக்குறிச்சி), கடலூர் வெட்டிவேர், மணப்பாறை கத்திரிக்காய் (திருச்சி), ஊட்டி பூண்டு மற்றும் ஜவ்வாது பேய் எள் (திருவண்ணாமலை) ஆகிய 10 வேளாண் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெறுவதற்காக 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**14. உழவர் சந்தைகளில் உள்ள கழிவுகளை உரமாக்கும் 25 இயந்திரங்களின் திறனை மேம்படுத்தி தரமான உரம் தயாரிக்கும் வகையில், தூளாக்கும் இயந்திரங்கள், உருளைச் சல்லடை போன்ற கூடுதல் உபகரணங்களுடன் அந்த இயந்திரங்கள் வலுப்படுத்தப்படும்.**

உழவர் சந்தைகளில் நிறுவப்பட்டுள்ள 25 கழிவுகளை உரமாக்கும் இயந்திரங்களின் திறனை மேம்படுத்தி தரமான உரம் தயாரிக்க ஏதுவாக தூளாக்கும் இயந்திரங்கள், உருளைச் சல்லடை உள்ளிட்ட கூடுதல் உபகரணங்கள் 71 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நிதியில் கொள்முதல் செய்யப்படும். இதன் மூலம் உழவர் சந்தைக் கழிவுகளை உரமாக்கும் செயல்பாடு மேம்படுத்தப்படும்.

**15. முன்னோடித் திட்ட அடிப்படையில் 5 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங் களுக்கு, சொந்தமாக குளிரூட்டப்பட்ட சரக்கு வாகன வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு, சந்தை இணைப்பு வலுப்படுத்தப்பட்டு, அவற்றின் செயல்பாடுகள் மேம்படுத்தப்படும்.**

தமிழ்நாடு முழுவதும் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs), விளைபொருட்களை ஒருங்கிணைத்து உரிய நேரத்தில் சந்தைகளுக்குக் கொண்டு செல்வதில் போக்குவரத்து வசதி ஒரு முக்கிய சவாலாக உள்ளது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கென சொந்தமான சரக்கு வாகன வசதிகள் இல்லாததால், இடைத்தரகர்களைச் சார்ந்திருக்கும் நிலை தொடர்கிறது. இதனால் போக்குவரத்துச் செலவு அதிகரிப்பதுடன், விளைபொருட்களுக்கு உரிய விலை பெற முடிவதில்லை.

இவற்றைக் கருத்தில் கொண்டு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், முன்னோடித் திட்டமாக, 5 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு குளிரூட்டப்பட்ட சரக்கு வாகனங்கள் வாங்க 50 சதவீத மானியம், அதிகபட்சமாக 10 இலட்சம் ரூபாய் அளிப்பதற்காக 50 இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

16. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தாங்கள் விற்பனை செய்யும் விளைபொருட்களின் ஈரப்பத அளவைப் பரிசோதித்து உரிய விலை பெற ஏதுவாக 100 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு மின்னணு ஈரப்பதமானிகள் வழங்கப்படும்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வர்த்தகம் செய்யும் நெல், பயறுவகைகள், சிறுதானியங்கள், மக்காச்சோளம், எண்ணெய்வித்துகள் போன்ற வேளாண் விளைபொருட்களின் ஈரப்பத அளவை விற்பனைக்கு முன் பரிசோதித்து, தரத்தின் அடிப்படையில் உரிய விலையில் சந்தைப்படுத்தி அவர்களின் வருமானத்தை அதிகரிக்க வழிவகை செய்திட 100 மின்னணு ஈரப்பதமானிகள் வாங்க தலா ரூ.10,000/- வீதம் மொத்தம் 10 இலட்சம் ரூபாய் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

**17. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள திறன் குறைந்த 'A' சுழற்சல்லடையை மாற்றி, புதிய சுழற் சல்லடையினை நிறுவ 99 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 'A' சுழற்சல்லடை நிறுவி 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் நிலையில், அதன் செயல்திறன் குறியீட்டில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே, உற்பத்தி செய்யப்படும் சர்க்கரையின் தரத்தையும் உற்பத்தித்திறனையும் உயர்த்த, இந்த அலகினை மாற்றி புதிய 'A' சுழற்சல்லடை நிறுவ 99 இலட்சம் ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**18. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் அரவைப் பகுதியில் இயங்கி வரும் இயந்திரங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து தானியங்கி முறையில் அரவை செய்திட 70 இலட்சம் ரூபாய் நிதியில் ஆலை தானியங்கிமயமாக்கல் (Mill Automation) மேற்கொள்ளப்படும்.**

அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் அரவைப் பகுதியில் இயங்கி வரும் இயந்திரங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து தானியங்கி முறையில் அரவை செய்திட 70 இலட்சம் ரூபாய் மாநில அரசு நிதியில் ஆலை தானியங்கிமயமாக்கல் மேற்கொள்ளப்படும். இதன் விளைவாக, ஆலையின் கரும்பு அரைக்கும் செயல்திறன் மேம்படுத்தப்பட்டு சர்க்கரைக் கட்டுமான சதவீதம் அதிகரிக்கும். மேலும், இயந்திரப் பழுதின்றி ஒரே சீரான அரவைத்திறனை எய்திடவும், கரும்புச் சக்கையில் சர்க்கரை இழப்பு ஏற்படுவதைக் குறைத்திடவும் இயலும்.

## 19. கள்ளக்குறிச்சி-1 மற்றும் கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவைப்பகுதி மோட்டாரைக் கட்டுப்படுத்தும் உபகரணம் (Mill DC Drive Control Unit) 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

கள்ளக்குறிச்சி-1 மற்றும் கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவைப்பகுதி மோட்டாரைக் கட்டுப்படுத்தும் உபகரணம் (Mill DC Drive Control Unit) நிறுவி 30 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால் அவற்றின் செயல்பாடுகளில் தொய்வு ஏற்பட்டு கரும்பு அரவைத்திறன் பாதிக்கப்படுகிறது. எனவே, கரும்பு அரவைத்திறனை உயர்த்தவும், சர்க்கரை இழப்புகளைக் குறைக்கவும் கரும்பு அரவைப்பகுதி மோட்டாரைக் கட்டுப்படுத்தும் புதிய உபகரணம் (Mill DC Drive Control Unit) இரண்டு ஆலைகளிலும் தலா 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**20. கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலையில், 250 சதுர மீட்டர் அளவு கொண்ட கரும்புச்சாறு சூடேற்றி 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டு ஆலையின் அரவைத்திறனும் சர்க்கரையின் தரமும் மேம்படுத்தப்படும்.**

கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலையில், 250 சதுர மீட்டர் அளவு கொண்ட கரும்புச்சாறு சூடேற்றி அலகின் செயல்பாடு குறியீட்டின்படி இல்லாததால், கரும்புச்சாறின் வெப்பநிலையின் இலக்கை அடைய இயலாததோடு சுண்டுகலனின் செயல்பாட்டுத் திறனையும் இழக்கவைப்பதால், இந்த அலகினை மாற்றுவது அவசியமாகிறது. எனவே, 250 சதுர மீட்டர் அளவு கொண்ட கரும்புச்சாறு சூடேற்றி புதிதாக அமைக்கப்பட்டு சர்க்கரையின் தரமும், ஆலையின் அரவைத்திறனும் உயர்த்தப்படும்.

**21. பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் உள்ள செயல்திறன் குறைந்த காற்று குளிரூட்டப்பட்ட படிகமாக்கிக் கலனை மாற்றி புதிய கலனை நிறுவ 53 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் உள்ள காற்று குளிரூட்டப்பட்ட படிகமாக்கிக் கலனின் செயல்பாடு, குறியீட்டின்படி இல்லாததால், அதனை மாற்றி புதிய அலகினை நிறுவ 53 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதனால், உற்பத்தி செய்யப்படும் சர்க்கரையின் தரம் உயர்த்தப்படுவதோடு, கழிவுப்பாகில் சர்க்கரை இழப்பு குறைக்கப்பட்டு, உற்பத்தித்திறனும் அதிகரிக்கப்படும்.

**22. வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள திறன் குறைந்த சுண்டுகலன் காலண்டிரியாவிற்கு மாற்றாக 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சுண்டுகலன் காலண்டிரியா நிறுவப்படும்.**

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள சுண்டுகலன் காலண்டிரியாவின் செயல்பாடு, குறியீட்டின்படி இல்லாததால், அடிக்கடி பழுதடைந்து தொடர் அரவை பாதிக்கப்படுகிறது. எனவே, இதற்கு மாற்றாக, 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சுண்டுகலன் காலண்டிரியா நிறுவப்படும்.

இதனால், சர்க்கரை இழப்பும் நீராவியின் பயன்பாடும் குறைக்கப்படுவதோடு, அரவைத்திறனையும் உயர்த்திட இயலும்.

**23. கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள செயல்திறன் குறைந்த தொடர் சுழற் சல்லடைக்கு (Continuous Centrifugal Machine) மாற்றாக 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தொடர் சுழற் சல்லடை நிறுவப்படும்.**

கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள தொடர் சுழற் சல்லடையின் (Continuous Centrifugal Machine) செயல்திறன், குறியீட்டின்படி இல்லாததால், அதிக பராமரிப்பு செலவும் அதிக சர்க்கரை இழப்பும் ஏற்படுவதோடு, முழு அரவைத்திறன் அடைய இயலாத நிலையும் உள்ளது. எனவே, இதனை மாற்றி புதிய தொடர் சுழற் சல்லடை 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு, சர்க்கரை இழப்பு குறைக்கப்பட்டு, சர்க்கரைக் கட்டுமானம் உயர்த்தப்பட்டு, ஆலையின் அரவைத்திறனும் உயர்த்தப்படும்.

## 24. பாசன வசதியுள்ள பகுதிகளில் அதிக காரத்தன்மையுடைய மிளகாய் இரகங்களின் சாகுபடி, 60 இலட்சம் ரூபாய் நிதியில் சோதனை அடிப்படையில் ஊக்குவிக்கப்படும்.

தமிழ்நாட்டில் மானாவாரிப் பகுதிகளான விருதுநகர், தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், தென்காசி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் குறைந்த அளவு கிடைக்கும் மழைநீரைப் பயன்படுத்தி மிளகாய் சாகுபடி மேற்கொள்ளப்படுவதால், விவசாயிகளுக்குக் குறைந்த அளவே உற்பத்தி மற்றும் வருமானம் கிடைக்கிறது. ஆனால், இந்த ஆறு மாவட்டங்களில் மண் மற்றும் பருவநிலைக்கு ஏற்ற அதிக காய்ப்புத் திறன் மற்றும் அதிக காரத்தன்மையுடைய, சந்தைக்கு ஏற்ற, தரமான வீரிய ஒட்டு இரகங்களைத் தேர்வு செய்து, பாசன வசதி உள்ள பகுதிகளில் சாகுபடி செய்வதன் மூலம் சீரான பயிர் வளர்ச்சியையும் அதிக மகசூலையும் பெற முடியும்.

எனவே, 2026-27 ஆம் ஆண்டில், சோதனை அடிப்படையில் அதிக காரத்தன்மையுடைய வீரிய ஒட்டு மிளகாய் இரகங்களின் சாகுபடியினைப் பாசன வசதியுள்ள பகுதிகளில் ஊக்குவிக்க 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 25. வெற்றிலை சாகுபடியில் உற்பத்தியையும் இலைத் தரத்தையும் உயர்த்தி விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க 30 இலட்சம் ரூபாய் நிதியில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் ஆத்தூர் வெற்றிலை, கும்பகோணம் வெற்றிலை, சோழவந்தான் வெற்றிலை போன்ற வெற்றிலை இரகங்கள் பாரம்பரியமாக வணிகப் பயிராகப் பயிரிடப்பட்டு விவசாயிகளுக்குத் தொடர்ந்து வருமானம் ஈட்டித்தருகின்றன. வெற்றிலை, பாரம்பரிய நிகழ்வுகளிலும் மருத்துவத்திலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதால் குறிப்பிடத்தக்க பரப்பில் பயிரிடப்படுகிறது. மேலும், வெற்றிலை சாகுபடியில் தரமான நடவுப் பொருட்கள், சொட்டுநீர்ப்பாசனம் போன்ற உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதால் உயர் மகசூல் பெற முடியும். எனவே, 2026-27 ஆம் ஆண்டில் வெற்றிலை சாகுபடியில் ஒருங்கிணைந்த உர மற்றும் பூச்சி மேலாண்மை முறைகளை ஊக்குவித்து உற்பத்தித்திறன் மற்றும் இலைத் தரத்தை உயர்த்தி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து, பாரம்பரிய வெற்றிலைத் தொழிலைப் பாதுகாக்க 30 இலட்சம் ரூபாய் நிதியில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

## 26. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைப் பகுதிகளுக்கேற்ற புதிய கரும்பு இரகங்களைத் தேர்வு செய்து வெளியிட ஏதுவாக, 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பரிசோதனை வயல்கள் அமைக்கப்படும்.

சர்க்கரை ஆலைப் பகுதிகளுக்கேற்ற, உயர் விளைச்சல் மற்றும் அதிக சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட புதிய கரும்பு இரகங்களைத் தேர்வு செய்து வெளியிடும் நோக்கில், தற்போது ஆய்வில் உள்ள வெளியிடப்படாத கரும்பு வளர்ப்புகளைக் கொண்டு 12 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்புப் பண்ணைகள் மற்றும் முன்னோடி கரும்பு விவசாயிகளின் வயல்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் பரிசோதனை வயல்கள் அமைக்கப்பட்டு, புதிய கரும்பு வளர்ப்புகளின் செயல்திறன் மதிப்பீடு செய்யப்படும். அவ்வாறு மதிப்பீடு செய்யப்படும் கரும்பு வளர்ப்புகள் பின்னர் புதிய கரும்பு இரகங்களாக வெளியிடப்படும். இத்திட்டம், சர்க்கரை ஆலை ஒன்றிற்கு ரூ.2.00 இலட்சம் வீதம், மொத்தம் 28 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

27. புதிதாக வெளியிடப்பட்ட கரும்பு இரகங்கள் மற்றும் நவீன சாகுபடித் தொழில்நுட்பங்களைப் பிரபலப்படுத்த கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகளின் வயல்களில் மாதிரி செயல்விளக்கத் திடல்கள் 24 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

புதிதாக வெளியிடப்பட்ட கரும்பு இரகங்களைப் பிரபலப்படுத்தவும், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கரும்பு உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், 12 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகளின் வயல்களில், ஆலைக்கு 5 திடல்கள் வீதம் மொத்தம் 70 மாதிரி செயல்விளக்கத் திடல்கள் 24 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

## 28. நவீன கரும்பு சாகுபடித் தொழில்நுட்பங்களை அறிந்திட 40 முன்னோடி கரும்பு விவசாயிகள் மகாராஷ்டிரா மாநிலம், பாராமதியில் உள்ள வேளாண் அறிவியல் மையத்திற்குக் கண்டுணர்வுப் பயணம் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

2026-27 ஆம் ஆண்டில், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence-AI) மற்றும் பொருட்களின் இணையம் (Internet of Things-IoT) அடிப்படையிலான நவீன கரும்பு சாகுபடித் தொழில்நுட்பங்கள் குறித்த வயல்வெளி செயல்விளக்கங்களை நேரில் கண்டறிந்து, அவற்றை நடைமுறைப்படுத்தும் வகையில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளைச் சேர்ந்த 40 முன்னோடி கரும்பு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, மகாராஷ்டிரா மாநிலம், பாராமதியில் உள்ள வேளாண் அறிவியல் மையத்திற்கு (KVK) 5 நாள் கண்டுணர்வுப் பயணமாக அழைத்துச் செல்லப்படுவர். இப்பயணத்திற்காக, 3 இலட்சம் ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்படும்.

**29. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களின் திறன் மேம்பாட்டிற்காக 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பயிற்சி மையம் அமைக்கப்படும்.**

மாறிவரும் டிஜிட்டல் தொழில்நுட்பம், அரசின் கொள்கைகள் மற்றும் நவீன நிர்வாக முறைகளுக்கு ஏற்ப, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்களின் திறன்களை பயிற்சிகள் வாயிலாகத் தொடர்ந்து புதுப்பித்தால் பல்கலைக்கழகப் பணியாளர்களின் பணித்திறன் அதிகரிப்பதோடு மாணவர்களின் கல்வித்தரம், ஆராய்ச்சி மற்றும் விவசாயிகளுக்கான தொழில்நுட்பச் சேவைகளும் வலுப்படுத்தப்படும். எனவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்களின் நிர்வாகத்திறன், தொழில்நுட்ப அறிவு மற்றும் கற்பித்தல் தரத்தை சர்வதேச அளவிற்கு உயர்த்தும்

நோக்கில், " வேளாண்மைப் பல்கலைக்கழகப் பணியாளர் பயிற்சி மையம்" கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**30. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 'உழவரின் வளரும் வேளாண்மை' மாத இதழ் அதிக அளவில் விவசாயிகளைச் சென்றடையும் வகையில் டிஜிட்டல் மயமாக்கப்படும்.**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 'உழவரின் வளரும் வேளாண்மை' மாத இதழில் 1975 ஆம் ஆண்டு முதல் பயிர் இரகங்கள், பயிர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு குறித்த செய்திகள் மற்றும் கட்டுரைகள் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வெளியிடப்பட்டு வருகின்றன. தற்பொழுது, இந்த இதழ் புத்தக வடிவில் சுமார் 10,000 சந்தாதாரர்களைச் சென்றடைந்து வருகிறது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் ஸ்மார்ட்போன் பயன்பாடு அதிகரித்துள்ள சூழலில், நுட்பமான வேளாண் தகவல்கள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை மாநிலம் முழுவதிலும் உள்ள இலட்சக்கணக்கான விவசாயிகள் நவீன இணையதளம் மற்றும் ஆண்ட்ராய்டு / iOS செயலிகள் வாயிலாக எளிதாக வாசிக்கும் (மின்–புத்தகம்) வகையில்

'உழவரின் வளரும் வேளாண்மை' இதழுக்கென நவீன இணையதளம் மற்றும் டிஜிட்டல் தளம் உருவாக்கப்பட்டு, டிஜிட்டல் மயமாக்கப்படும். இதற்கென 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**31. வேளாண்மைப் பொறியியல் துறையில் புதிதாக நியமிக்கப்பட்ட 115 உதவிப் பொறியாளர்கள் உள்ளிட்ட 200 அரசு அலுவலர்களுக்கு திருச்சிராப்பள்ளியில் உள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தில் பயிற்சிகள் வழங்கப்படும்.**

வேளாண்மைப் பொறியியல் துறையில் புதிதாக நியமிக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு அடிப்படை வேளாண்மைப் பொறியியல் தொழில் நுட்பங்கள் குறித்து அறிமுகம் மற்றும் திறன் மேம்பாட்டை ஏற்படுத்தும் வகையில் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும். மேலும், துறையின் நிர்வாக மற்றும் பணியமைப்பு விதிமுறைகள் குறித்து, துறையின் அமைச்சுப் பணியாளர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.

நடப்பாண்டில், திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தில் தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் ஒருங்கிணைப்புடன் 200 அரசு அலுவலர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இப்பயிற்சிகள் வழங்கப்படும்.

## 32. நவீன வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் தொடர்பான 5 நாட்கள் பயிற்சி 300 படித்த இளைஞர்களுக்கு வழங்கப்படும்.

"தொழில் மேம்பாட்டிற்கான பயிற்சி, இளைஞர்களின் முன்னேற்றத்திற்கான முயற்சி" என்பதற்கேற்ப, வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களில் உருவாகி வரும் வேலைவாய்ப்பு மற்றும் நவீன வேளாண்மையில் தொழில் முனைவு வாய்ப்புகள் குறித்து, படித்த இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், நடப்பாண்டில் சென்னையில் அமைந்துள்ள மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையத்தில் 300 படித்த இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்கள், நுண்ணீர்ப் பாசனம், உணவு பதப்படுத்துதல், வேளாண்மையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பங்கள், வேளாண்மையில் இணையவழித் தொழில்நுட்பங்கள் (IoT) மற்றும் இயந்திரக் கற்றல் (Machine Learning) உள்ளிட்ட நவீன வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் தொடர்பான ஐந்து நாட்கள் பயிற்சி வழங்கப்படும்.

**33. ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் பயன்பாட்டிற்கான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி மாவட்டந்தோறும் நடத்தப்படும்.**

சூரிய சக்தி பம்புசெட்டுகள், சூரிய சக்தியால் இயங்கும் மின்வேலி அமைப்புகள் மற்றும் சூரியக் கூடார உலர்த்திகள் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைப்புகளின் முறையான பயன்பாடு மற்றும் பராமரிப்பை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட அளவிலான விழிப்புணர்வுப் பயிற்சிகள் நடத்தப்படும்.

நடப்பாண்டில், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் பங்கேற்புடன் வேளாண் அறிவியல் நிலையங்களுடன் (KVK) ஒருங்கிணைந்து 1,000 விவசாயிகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**34. உழவர் பெருமக்கள் பயனடையும் வகையில் உழவர் செயலியில் வேளாண் இயந்திரங்களை இயக்குபவர்களின் விவரங்கள் மற்றும் மதிப்புக் கூட்டும் இயந்திரங்களின் உரிமையாளர்கள் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்படும்.**

வேளாண் இயந்திரங்களை இயக்குபவர்களின் பெயர், முகவரி, கைபேசி எண், அவர்கள் எந்த வகை இயந்திரங்களை இயக்குவதற்கான திறன்பெற்றவர்கள் மற்றும் பணிபுரிய விரும்பும் பகுதி உள்ளிட்ட விவரங்கள் உழவர் செயலியில் பதிவேற்றம் செய்யப்படும். மேலும், விவசாயிகள் தாங்கள் விளைவித்த வேளாண் விளைபொருட்களை கிராம அளவிலேயே மதிப்புக் கூட்டிட ஏதுவாக நடப்பாண்டில், சூரியக் கூடார உலர்த்திகள் உள்ளிட்ட மதிப்புக் கூட்டும் இயந்திரங்களின் உரிமையாளர்களின் பெயர், முகவரி, கைபேசி எண் மாவட்ட மற்றும் வட்டார வாரியாக உழவர் செயலியில் பதிவேற்றம் செய்யப்படும்.

இதன் மூலம் விவசாயிகள் பல்வேறு வேளாண் பணிகளுக்கு, தங்களுடைய வேளாண் இயந்திரங்களை இயக்கிடத்

தேவைப்படுகின்ற இயக்குபவர்களை எளிதில் கண்டறிந்து பணியில் ஈடுபடுத்திடவும், தங்கள் பகுதிகளில் உள்ள மதிப்புக் கூட்டும் இயந்திரங்களின் உரிமையாளர்களை அணுகி, விளைவித்த விளைபொருட்களை மதிப்புக் கூட்டி நிகர வருமானத்தை அதிகரித்திடவும் இயலும்.

**ர. வினோத்**

**வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்**

அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.